இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 19-09-2024

# பவள விழா பாய்ச்சல்

**“கழகம் - நல்ல கழகம்!**

**நம் திராவிட முன்னேற்றக் கழகம்!**

**அதன் திருப்பணி என்றென்றும் தொடரும்!”** - என்று பாடி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா பாய்ச்சலைத் தொடங்கி வைத்திருக்கிறார் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் - தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்!

ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ்நாட்டு மக்களின் காதுகளில் ஒலித்த பாட்டு அது. அந்தப் பாட்டுதான் தி.மு.க. பொதுக்கூட்டம் நடக்கப் போகிறது என்பதை அந்த ஊருக்குள் அறிவிக்கும் சங்கநாதம்.

அந்தப் பாட்டுதான், தி.மு.க. போராட்டக் களத்துக்குள் சென்று கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லும் போர்ப்பாட்டு.

அந்தப் பாட்டுதான், தேர்தல் களத்தில், கழகத் தொண்டர்களை உற்சாகம் அடைய வைத்த உணர்ச்சிப்பாட்டு.

அந்தப் பாட்டுதான், வெற்றியையே தந்து கொண்டிருக்கும் வெற்றிப் பாட்டு.

அந்தப் பாட்டு தொடங்கியதும், தொண்டர்களே சேர்ந்து பாடுவார்கள். அந்தப் பாட்டைத்தான் தலைவரே பாடி, பவள விழாவைக் கொண்டாடி இருக்கிறார்.

★ தென்னர் சமுதாயம் இன்னல் உரும்போது
தன்னையே தந்த கழகம்!
★ முன்னர் நமையாண்ட மன்னர்களை வீழ்த்தி
முன்னேற்றம் கண்ட கழகம்!
★ என்றும் மடமையை எதிர்க்கின்ற கழகம்!

இன்று மாநில சுயாட்சிக் கழகம்! - என்பதுதான் அந்தப் பாடலின் அடுத்தடுத்த வரிகள். மாநில சுயாட்சிக் கொள்கையைக் கையில் எடுத்து தனது பாய்ச்சலைத் தொடங்கி இருக்கிறார் தலைவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவளவிழா -முப்பெரும் விழாவானது அடுத்தடுத்த வெற்றிகளுக்கு அடித்தளம் அமைக்கும் களமாக அமைந்து விட்டது. பொதுவாக தி.மு.க.வின் விழாக்கள், வெறும் கொண்டாட்டங்களாக முடிந்துவிடுவது இல்லை. அடுத்தடுத்து பெற வேண்டிய வெற்றிகளுக்கு அடித்தளமாக அமையும் விழாக்களாகத்தான் நடைபெறும்.

**“25 வயதைக் கொண்டாடும் வெள்ளி விழா ஆண்டிலும் கழகம் ஆட்சியில் இருந்தது. 50 வயதைக் கொண்டாடும் பொன்விழா ஆண்டிலும் கழகம் ஆட்சியில் இருந்தது. 75 வயதைக் கொண்டாடும் பவளவிழா ஆண்டிலும் - இப்போதும் கழகம் ஆட்சியில் இருக்கிறது. நூற்றாண்டு விழாக் கொண்டாடும் போதும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சியில் இருக்கும்.”** என்று நெஞ்சை நிமிர்த்தி தலைவர் சொல்லும் போது மாநாட்டுப் பந்தலே குலுங்கியது.

நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் என்று தலைவர் கலைஞருக்குப் பெயர். உங்களால் தலைமைப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு எதிர்கொண்ட தேர்தலில் எல்லாம் கழகத்தை வெற்றி பெற வைத்திருக்கிறேன். நான் என்றால் தனிப்பட்ட ஸ்டாலின் அல்ல. ஸ்டாலின் என்ற பெயருக்குள் லட்சக்கணக்கான தொண்டர்களின் பெயரும் அடங்கி உள்ளது. உங்களது உழைப்பால் - தியாகத்தால் - செயல்பாடுகளால் - நடவடிக்கைகளால் இந்த வெற்றிகள் சாத்தியமானது. இதுவரை நடந்த தேர்தல்களைப் போல அடுத்தடுத்து வரப் போகும் தேர்தல்களிலும் நாம்தான் வெற்றி பெறுவோம்.

இதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஏதோ மமதையால் நான் இதைச் சொல்லவில்லை. எனது தொண்டர்கள் மீதுள்ள நம்பிக்கையால் சொல்கிறேன்.

அதற்காக மெத்தனமாக யாரும் இருந்துவிடக் கூடாது. இருக்க மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும் என்பதையும் அழுத்தமாகச் சொன்னார் தலைவர்.

**“நம்முடைய தொடர் வெற்றிகளின் மூலமாக பவள விழாவைக் கொண்டாடுவோம். நம்முடைய தொடர் வெற்றிகளின் மூலமாக நூற்றாண்டு விழாவை நோக்கி முன்னேறுவோம். அடுத்து நம்முடைய இலக்கு 2026 தேர்தல். இதுவரை இப்படியொரு வெற்றியை எந்தக் கட்சியும் பெற்றது இல்லை என்று 2026 இல் வரலாறு சொல்ல வேண்டும். அந்த வரலாற்றை எழுதுவதற்கு நீங்கள் தயாரா?” என்று பல்லாயிரக்கணக்கான தொண்டர்களைப் பார்த்து தலைவர் கேட்க, அவர்கள் ‘தயார் தயார்’ என்று சொல்லி இருக்கிறார்கள். கூர் தீட்டப்பட்டுள்ளார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள். இதுதான் பவள விழா பாய்ச்சலாகும்.**

இந்த 75 ஆண்டு காலத்தில் எத்தனையோ கட்சிகள் தொடங்கப்பட்டு விட்டன. மறைந்தும் போய்விட்டன. ஆனால் தி.மு.க.தான் கம்பீரமாக காட்சி தரும் கட்சியாக இருக்கிறது. பவள விழா கொண்டாடும் நேரத்தில் கழகம் ஆட்சியில் அமர்ந்திருக்கும் பெருமையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார் நம்முடைய தலைவர் அவர்கள். அவர் தலைவராக வந்தது முதல் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் கழகத்தை வெற்றிபெற வைத்துள்ளார்கள்.

**2019 - நாடாளுமன்றத் தேர்தல்**
**2019 - சட்டமன்ற இடைத் தேர்தல்**
**2019 - 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல்**
**2021 - ஊரக உள்ளாட்சித் தேர்தல்**
**2021 - தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்**
**2022 - நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்**
**2023 - ஈரோடு இடைத்தேர்தல்**
**2024 - நாடாளுமன்றத் தேர்தல் -**
**விக்கிரவாண்டி இடைத்தேர்தல்** - ஆகிய ஒன்பது தேர்தல்களிலும் கழகத்தை வெற்றி பெற வைத்து வெற்றியின் நாயகனாக இருக்கிறார் திராவிட நாயகன் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். தி.மு.க.வின் வரலாற்றையே வெற்றியின் வரலாறாகத் தலைவர் அவர்கள் மாற்றிக் காட்டி இருக்கிறார்கள். அத்தகைய வெற்றி வரலாற்றின் தொடர்ச்சியாகவே பவள விழாவும் நடைபெற்றுள்ளது.

**நடைபெற்றது பவள விழா, முப்பெரும் விழா மட்டுமல்ல. 2026 தேர்தல் வெற்றிக்கான பாய்ச்சல் ஆகும்.**



அமைச்சர் – சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்களின் மூத்த சகோதரர் மறைந்த பி.கே.தேவராஜுலு அவர்களின் மகன் லோகேஷ்குமார் – ரித்திகா இணையரின் திருமண வரவேற்பு விழா சென்னை வேப்பேரியில் கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நடத்தி வைக்கப்பட்ட திருமணத்தின் மூலம் இல்லற வாழ்வில் அடியெடுத்து வைத்துள்ள லோகேஷ்குமார் – ரித்திகா இணையர், தந்தை பெரியாரும் – பகுத்தறிவும் போல; அண்ணாவும் – மாநில சுயாட்சியும் போல; கலைஞரும் – சமூகநீதியும் போல; தலைவரும் – வெற்றிகளும் போலப் பல்லாண்டு வாழ்கவென இளைஞர் நலன்,விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தி மகிழ்ந்தார்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (18.09.2024) இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் (ம) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 (Khelo India Youth Games 2023), சென்னைப் பெருநகரப் பகுதியில் நடத்திய செலவான ரூபாய் 43.33 கோடி நிதியை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## செப்.20 முதல் 3 நாட்களுக்கு
# சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்!

சென்னை,செப்.19-

வார விடுமுறையை முன்னிட்டு செப்.20 முதல் 3 நாட்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துக் கழகம் தகவல் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்; செப். 20, 21,22 வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கழக அளவில்
# மாணவர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல்!
## விருப்பமுள்ளவர்கள் கலந்து கொள்ள வடக்கு மாவட்டச் செயலாளர் பி. கீதா ஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, செப். 19-

தி.மு.கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் மாநில இளைஞரணிச் செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தி.மு.கழக மாணவர் அணியின் நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக அளவில் மாணவர் அணிக்கு நிர்வாகிகளை நேர்காணல் மூலம் தேர்வு செய்திட கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.



அவரது அறிவிப்புக்கு இணங்க தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அளவில் மாணவர் அணி நிர்வாகிகள் தேர்வு செய்வதற்கான நேர்காணல் நாளை (20.08.2024-வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு தூத்துக்குடி கலைஞர் அரங்கத்தில் வைத்து நடைபெற இருக்கிறது.

நகரம், ஒன்றியம், பகுதி, பேரூர் கழக அளவில் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பதவிக்கு 30 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் மட்டுமே நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டும். கல்லூரிப் படிப்பு (அல்லது) பட்டயபடிப்பு படித்திருக்க வேண்டும். கல்லூரியில் படித்துக் கொண்டிருப்பவர்களும் நேர்காணலில் கலந்து கொள்ளலாம்.

நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அளவில் மாணவர் அணி அமைப்பாளர் ஒருவரும், துணை அமைப்பாளர்களாக 5 பேரும் தேர்வு செய்யப்படுவார்கள். இதில் ஒரு துணை அமைப்பாளர் மகளிராகவும், ஒரு துணை அமைப்பாளர் கல்லூரி அல்லது பட்டய படிப்பு படித்து கொண்டிருப்பராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட விதிமுறைகளின்படி நடைபெறும் மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணலில் சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகங்களுக்கு உட்பட்ட மாணவரணி தோழர்கள் கலந்து கொள்ளவும் அதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் செய்திடவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பி.கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## குத்தாலம் பி.கல்யாணம் தலைமை!
# குத்தாலத்தில் முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி சிலை திறப்பு விழா!
## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

மயிலாடுதுறை, செப்.19-

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றிய தி,மு.க. அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அன்பு தம்பியாக, சோழமண்டல தளகத்தர் முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி 96வது பிறந்த நாள் விழா மற்றும் கோசி. மணி முழு உருவ திருஉருவ சிலை திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினரும், சிலை அமைப்பு குழு தலைவர் மற்றும் செயலாளருமான குத்தாலம் பி.கல்யாணம் தலைமை தாங்கினார். குத்தாலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கு.வைத்தியநாதன் வரவேற்றார். முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி திருஉருவச் சிலையை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் கழக கொள்கை பரப்பு துணைச் செலயாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தரசான், ஜி.என்.ரவி, முத்து மகேந்திரன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கோ.ஜி. சினிவாசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி குடும்பத்தைச் சேர்ந்த ஆடுதுறை பேரூர் செயலாளர் கோசி.இளங்கோ, அன்பு, புகழேந்தி, கீதா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ.சி.ம. திருமாவளவன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செலயாளர்கள் மங்கை எம்.சங்கர், என். இளையபெருமாள், எம். அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், அமிர்த. விஜயகுமார், பஞ்சுகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், ப.முருகமணி, ஞான.இமையநாதன், ஏ.ஆர்.ராஜா, வலைங்கமான் வி.அன்பரசன், கீழ்வேளுர் தெற்கு கே.பழனியப்பன், குடவாசல் பி.பிரபாகரன், நகரக் கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக் குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் க.அறிவழகன், எம். கே.மருது, இரா.மனோகரன், வி.எஸ்.என்.செந்தில், பிரபாகர், குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கீதா மாரியப்பன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், டாக்டர் செல்வம், ஓய்வு பெற்ற காவல் துணை கண்காணிப்பாளர் ரவி மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர். முடிவில் குத்தாலம் பேரூர் கழகச் செயலாளரும், பேரூராட்சி துணைத்தலைவர் எம்.சம்சுதீன் நன்றி கூறினார். முன்னதாக குத்தாலம் கடைத் தெருவில் உள்ள அண்ணா சிலையில் இருந்து குத்தாலம் ஒன்றிய அலுவலகம் வரை கோசி. மணி பிறந்த நாள் ஊர்வலம் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் தலைமையில் நடைபெற்றது.

# வடக்கு மண்டல பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆய்வுக் கூட்டம்!
## துரை கி.சரவணன் - டி.கே.பி.கருணாநிதி - நிர்வாகிகள் பங்கேற்பு!

சென்னை, செப். 19 -

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது ஆணைக்கினங்க நேற்று வடக்கு மண்டல பொறியாளர் அணியின் மண்டல ஆய்வு கூட்டம் திருவள்ளுவர் மத்திய மாவட்டத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செ ய ல ா ள ர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில பொறியாளர் அணி தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான துரை கி.சரவணன்,

மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ். கே.பி. கருணாநிதி, மாநில பொறியாளர் அணி துணைத் செயலாளர்கள் ஈ.ரா நரேந்திரன், உமாகாந்த், சி. பிரதீப் இ.ரா பரமேஷ் குமார் ஆகியோர் ஆலோசனை வழங்கி பேசினர்.

இக்கூட்டத்தில் திருவள்ளுவர் மத்திய மாவட்ட அமைப்பாளர் திண்ணனூர் மோகன் வரவேற்றுப் பேசினார்.

திருவள்ளுவர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாறர் ஆரணி எஸ். ரோஸ் பொன்னையன், மாவட்ட தலைவர் பிரசாந்த், துணைத் தலைவர் துளசிராமன் மற்றும் தமிழ் பிரியன், காண்டீபன், மணிகண்டன் கோகுல்நாத், தேவராஜ், கௌரி சங்கர், பிரபாகர், விக்கி உள்ளிட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.